செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

[ௗ-அஉ] யாழ்ப்பாணம்- சாதாரண ஞு ஆவணி மீ கஉ உ வெள்ளிக்கிழமை (28-8-1970) [இலை-உக

'வெய்யவன் நடுவண் வைகும் பரமனேபோல் ஆறுமாமுகத்து வள்ளல்' பவனி வருகின்றார்

# "கன்னிய ரிருவர் நீங்காக் கருணைவாரிதியே போற்றி"

## நல்லையூர்க் கந்தவேளே!

எண்ணும் மறைக்கதிபனேயமரர் இடர்தீர்த்த
ஈராறு கையழகனே
இயலிசை நாடகத் தமிழழகனே எங்கும்
இசைவான மயிலழகனே
பண்ணும் பதப்பொருளு மானகலை யழகனே
பயில்சேவற் கொடியழகனே
பரமனும்பார்வதியும்பரிவாய் அணைத்தருளும்
பாலஷண்முக வழகனே
கண்ணும் கருத்துமாய்க் கற்றவ ருளத்திலே
காண்கின்ற கதிரழகனே
கருணைவே லழகனே கதிரைமலை யழகனே
காஞ்சிமாவடி யழகனே
எண்ணும் மனத்திலுன தெண்ணம்விளைக்கின்ற
நன்னெறி யெமக்கருளுவாய்
ஞானகுஞ் சரிவள்ளி நாதனே அழகான
நல்லையூர்க் கந்தவேளே.

— "அருட்கவி" சீ. விநாசித்தம்பிப் புலவர்.

## திருச்சி அருள்நெறித் திருக்கூட்டம்

இக் கூட்டத்தினநடைப யாத்திரைக் (44 பேர்களையுடைய) கோஷ்டி 21-8-70 இலங்கை வந்துசேர்ந்துள்ளது. திருக்கேதீஸ்வரம், கதிர்காமம், செல்லக்கதிர்காமம், திருகோணமலை முதலிய இடங்களுக்குச் சென்ற பின்பு ஷை கோஷ்டி 28-8-70 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்துசேரும். ஷை கோஷ்டியினர் யாழ்ப்பாணத்தில் தங்கும்பொழுது சைவபரிபாலன சபையார் அவர்களைத் தங்கள் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 28-8-70 தொடக்கம் 31-8-70 வரை உபசரிப்பார்கள்

## பண்ணிசைப் புலவரின் சேவை தெய்வீகமானது

உருப்பிராயில்
ஸ்ரீ. பி. ஏ. எஸ். இராஜசேகரன்
அவர்களுக்குப் பாராட்டு

"சைவமக்கள் கடைத்தேறுதற்கு முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வழிபடுதல் அதிமுக்கியமாம். சிவத்தை வழிபடச் சிறந்த வழி தெய்வத் திருவருட் பாடல்களான தேவாரத் திருமுறைகளை உள்ளன்புடன் ஓதுதலே. அவற்றையுள்ளன்புடன் ஓதினால் எமது வினைகளெல்லாம் எம்மைவிட்டு நீங்கிவிடும். "சிவ சிவ என்கிலர் தீவினையாளர்; சிவ சிவ என்றிடத் தேவருமாவர்" என்பது திருமந்திரம்.

தெய்வத திருமுறைகளை வரன்முறையிலே பண்ணுக்கிசையப் பாடினால் அதுவே மேலான தவமாகும்.

( வளர்ச்சி 2-ஆம் பக்கம் பார்க்குக )



## நல்லைக் கந்தன்!

[ தேர்த் திருவிழா (30-8-70) ஞாயிற்றுக்கிழமை ]

பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன் மாமயிலாய் போற்றி
முன்னிய கருணையாறு
முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக்
கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு
ளிருக்குமா மணியே போற்றி.

உலகம் உய்யும் பொருட்டு சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்றும் ஆறு பொறிகள் தோன்றின. அவை சரவணப் பொய்கையையடைந்து ஆறு குழந்தைகளாயின. உமாதேவியார் அவ்வாறு குழந்தைகளையும் சேர்த்தவுடன் ஒரு உடலும் ஆறு திருமுகங்களுடன் கந்தசுவாமியார் தோன்றினார். அவர் சோதிப் பிழம்பு. அருவமுமாவர். உருவமுமாவர்; அருவுருவமுமாவர். சூரியன் உலகில் இருளைப் போக்குகின்ற தன்மைபோல மக்களுடைய அகவிருளை அவர் போக்க வல்லவர். விரதங்களை அநுட்டித்து அகமும் புறமும் தூய்மையானவருடைய உள்ளத்தில் அவர் வீற்றிருப்பார்,

## சைவசமய நூல்களையும் சஞ்சிகைகளையும் தடைசெய்ய வேண்டாம்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத் தலைவர், சைவப்புலவர் வித்துவான் வ. செல்லையா, காரியதரிசி சைவப் புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை, மட்டக்களப்பு கிளைச் சங்கத்தலைவர் சைவப்புலவர் பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை ஆகியவர்கள் அண்மையில் தபால் தந்தி போக்குவரத்து அமைச்சர் திரு. செ குமாரசூரியர் அவர்களைப் பேட்டி கண்டு சைவசமயக் கருத்துக்களை விளக்கும் நூல்களையும், சஞ்சிகைகளையும் இந்தியாவிலிருந்து வருவித்தற்கு தடை விதிக்கவேண்டாமெனக் கேட்டுக்கொண்டார்கள். அமைச்சர் இவ்விஷயமாக ஆவன செய்வதாகப் பதில் கூறினாரென அறிகின்றோம்.

## பஜனை பாதயாத்திரை

நல்லூர் முருகப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு, 28-8-70 வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணிக்கு ஸ்ரீ நயினை நாகபூஷணியம்பாள் ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளை அடியார்கள் தரிசித்துக்கொண்டு 29-8-70 சனிக்கிழமை அதிகாலை பஜனை யாத்திரையாரம்பிப்பார்கள். பஜனை ஊர்வலம் புங்குடுதீவு மேற்கு, பெருங்காடு சலட்டி புங்குடுதீவு கிழக்கு மடத்து

( வளர்ச்சி 2 - ஆம் பக்கம் )

## இமைப்பொழுதும் அவர்கள் நெஞ்சை விட்டகலார்.

அவருடைய ஒருமுகம் இருளைப் போக்குகின்ற கிரணங்களைத் தோற்றுவிக்கும். ஒருமுகம் அன்பர்களுக்கு வேண்டும் வரங்களைக் கொடுக்கும். ஒருமுகம் வேத முறைமை தவறாத பிராமணருடைய யாகங்களில் தீங்கு வராமற் காக்கும். ஒருமுகம் வேதாகமங்களில் மறைந்து கிடக்கும் பொருள்களை இருடிகளுக்குச் சந்திரனைப்போல விளக்கும். ஒருமுகம் தேவர்களைக் காக்கும்பொருட்டு அசுரருடன் போர் புரிய போர்க் களத்தை வேட்கும். ஒருமுகம் வேடருடைய மகளாகிய வள்ளிநாயகியுடன் மகிழ்ச்சியுறும்.

மெய்யடியார்கள் வேண்டுமிடத்து பச்சை மயில் வாகனத்தின் மீது ஆறு திருமுகங்களுடனும் பன்னிரண்டு திண் டோளுடனும், வேலாயுதத்துடனும் தெய்வயானையம்மையார் வள்ளிநாயகியம்மையார் சமேதராய்க் காட்சியளித்துக் காத்தருளுவார். இருவினைகளையும் போக்கி நம்மைக் காத்தருளுவார்.

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

நஞ்செயலற்றிந்த நாமற்றபின் னாதன் றஞ்செயருனேயென்றுந்திபற, தன்னையே தந்தானென்றுந்திபற

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரணஞு ஆவணிமீ கஉ-உ வெள்ளிக்கிழமை [1970]

## மாணவர்கள் வியாகூலம்

இவ்வருடம் வித்தியாபகுதியினரால் நடத்தப்பட்ட சர்வகலாசாலை பொறியியற் பகுதிப் பரீட்சை புள்ளிவிபரங்கள் ஆராயப்பெற்று 155 மாணவர்கள் சர்வகலாசாலைப் பிரவேசத்துக்குத் தகுதியுடையவர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர். அவர்களுள் பெரும்பாலார் தமிழர்கள். இத்தேர்தல் பேற்றை பெரும்பான்மை மக்களுட் சிலர் ஆட்சேபிக்கின்றனர் அரசாங்கத்துக்கும் தங்கள் ஆட்சேபனையை மனுச்செய்துள்ளார்கள். அதன் பேருக மந்திரி சபை கூடி இவ்விஷயத்தைப் பரிசிலனை செய்து டி பரீட்சைக்குரிய விடைத்தாள்களைத் திருப்பிப் பார்வையிடவொழுங்கு செய்தல் வேண்டுமெனவும் புள்ளிகள் பராபட்சமாக வழங்கியமை நிரூபிக்கப்பட்டால் டி பரீட்சையைத் திருப்பிவைக்கவேண்டிய ஒழுங்குகளை கல்வி மந்திரியவர்கள் செய்தல் வேண்டுமெனவும் தீர்மானஞ் செய்துள்ளது

அரசியர் நடத்துகின்ற இத்தகைய இப்பரீட்சைகளில் சித்தியடையும் மாணவர்களுள் சிங்களமாணவர்கள் கூடுதலாகயிருக்கும்பொழுது இவவிதமான நீதியற்ற ஆட்சேபனை கிளப்பப்படுவதில்லை

மந்திரி சபையின் தீர்மானம் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்குப் பெரும மனவேதனையையுண்டுபண்ணக் கூடியதாகவிருக்கும். தெரிவு செய்யப்பட்ட தமிழ்மாணவர்களுக்கு இச்செய்தி பெரும் வியாகூலத்தை உண்டு பண்ணும். அவர்கள் நித்திரை விழித்துக் கஷ்டப்பட்டு படித்துப் பரீட்சையில் தோற்றினர்கள். அவர்களுடைய பிரயாசத்துக்குத் தகுந்த பரீட்சை பேறு வெளியானது துரதிஷ்டமாக அம்மாணவர்கள் தங்கள் பிரயாசத்தின் மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகளை அவர்கள் அடையாமற்றடுப்பது பெரும் துரோகமாகும். அவர்களுடைய எதிர்கால வாழ்வு மந்திரி சபையின் முடிவினுல் பெரிதும் பாதிக்கப்படும். ஏழைத் தமிழ்மாணவர்கள் சிறுபான்மை வகுப்பினராகிய தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர்களென்ற குற்றத்திற்காக தண்டிக்கப்படுதல் நியாயமாகுமா?

அரசாங்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் இருவர் இதுவரை வெளிவந்த புள்ளிகள் மாற்றப்பெருதென்ற உறுதிமொழியை வெளியிட்டிருக்கின்றார்கள். ஒருவர் தபால் தந்திச்சேவைப் பகுதி மந்திரி திரு. செ. குமாரசூரியர், மற்றையவர் கல்விப்பகுதிக்குரிய நிரந்தரக் காரியதரிசி திரு. பிரேமதாசா உடுகம. கல்வி மந்திரியவர்கள் இவ் விஷயத்தில் எவ்விதம் நடந்து கொள்வாரென்பதை யாவரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் நிலைமையிலுள்ளனர்.

அரசியல் நிர்ணய சட்டம் அமைக்கப்படும்பொழுது சிறுபான்மை மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கக்கூடிய அம்சங்கள் சேர்க்கப்படுமெனை ஐக்கிய முன்னணியரசாங்கம் உறுதிமொழி கூறுகின்றது இக்கட்டுரையில் காட்டப்பட்டிருக்கும் பொறியியல் மாணவர்கள் செய்தி அவர்களுடைய உறுதிமொழிக்கு பாதகமாகவிருக்குமெனக் கருதுகின்றோம். மாணவர்களுடைய மனக்கலக்கத்தை நீக்கி தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் இன வொற்றுமையை பேணக்கூடியவிதமாக அரசாங்கம் செயலாற்றுமென எதிர்பார்க்கின்றோம்

---

உ

## மறைஞானசம்பந்தநாயனுர் குருபூசை

நாள்: ஆவணிமீ கஎ-ஆம் உ (12-9-70) புதன்கிழமை
இடம்: சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்

இரவு 7 மணி விரிவுரைக் கூட்டம்
கடவுள் ஆராதனை
தமிழ்மறை ஓதல்: ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக் குருக்கள்
தலைவர்: சைவப்புலவர்மணி த. குமாரசுவாமிப்பிள்ளை
விரிவுரைகள்:
1. தலைமையுரை
2. சந்தான பரம்பரை — திரு. அ. நாகலிங்கம் அவர்கள்
3. மறைஞானசம்பந்தர் —சித்தாந்த பண்டிதர் திரு. வே. சோமசுந்தரம் அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

ஆ. தனபாலசிங்கம் — காரியதரிசி
மு. மயில்வாகனம் — சமயப்பிரசார அமைச்சர்

சைவபரிபாலன சபை யாழ்ப்பாணம். 27-8-70

# இறைவனோடுஇயைந்து இன்புறும் இயல்பு

சைவப்புலவர் வ. சுப்பிரமணியம்
தும்பைநகர், பருத்தித்துறை.

பசு, பதி, பாசமாகிய முப்பொருளில் - பதியாகிய இறைவன், உடல் உயிர் இரண்டிலும் மறைந்து யாவற்றையும் இயக்குகின்றுன். உயிரோடு அனுகியாக ஆணவமலம் (செம்பினிற் களிம்புபோல) மறைந்து பற்றிக்கொண்டிருக்கிறது. அதை நீக்கி உயிர்களைப் பரிபூரண பேரின்பத்தில் கூட்டவே, இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய பஞ்சகிருத்தியங்களைச் செய்கிறுன்.

ஆணவமலம் பற்றியிருப்பதனுல் உயிர் சிறுமையடைகிறது ஆணவமலத்தின் தன்மை கெட்டால், உயிர் தன்னுடன் இறைவன் கலந்து நடத்தும் தன்மையை உள்ளபடி உணர்ந்து, தன்செயலெல்லாம் இறைவன் செயலெனத் தெளிந்து உணர்ந்து ஆறுதலடையும். இறைவன் உயிரைப் பற்றிய மலத்தைப்போக்க மாயாகாரியமாகிய கருவிகளோடு உயிரைச் சேர்த்து இந்த வாய்ப்பைத்தந்துள்ளான், உடம்பு - சடப்பொருள் அதாவது அறிவில்லாத பொருள் உயிர்சித்துப்பொருள் - அதாவது அறிவுள்ள பொருள். உடல் அழியும், உயிர் அழியாத நித்தியப் பொருள் உயிர் கலப்பினுல்தான், தத்துவங்களாகிய முப்பத்தாறும் இயங்குகின்றன. உயிர்கலக்காவிட்டால் கண் பார்க்கமாட்டா; காதுகள் கேட்கமாட்டா, வாய் பேசாது, எந்தக் கருவியும் இயங்காது. ஆதலால், உடலின் செயல்கள் உயிரின் செயல்களாகும். அவ்வுயிருக்கும் சுதந்திரமில்லை. தானே உடலை அமைத்துக் கொள்ளாது, நினைத்தும் மறந்தும் வேதனைப்படுகிறது.

மறந்து, மறந்து நினைக்கும் மனதிற்கு வேருக ஒரு பெற்றித்தாய், கண்டும், கூட்டியும், அறிந்தும், அறிவித்தும், செய்தும் செய்வித்தும் இறைவன் நடத்துகிறன் என்பதை உயிர் உணராத நிலையில் (பெத்த நிலையில் அதாவது மலங்களோடு கட்டுப்பட்ட நிலையில்) யாவும் தன்செயலென எண்ணி இன்ப துன்பத்தில் அழுந்துகிறது. உயிர் கருவிகளோடு கலந்து, அவைகளின் வண்ணமாகத் தோன்றும். உண்மையென்று மயங்குகிறது. கருவிகள் வேறு தான் வேறு என்பதை உயிர் உணர்ந்தால் மயங்காது தெளிவடையும் மறந்தால் கலந்து மயங்கும். கருவிகளோடு கலந்துவந்த மாறுபாடு அவற்றின் கலப்பால் வந்ததேயன்றி, உண்மையில் தனக்கில்லை என்பதை சகல கேவலத்தைப் பிரிந்து முத்தி நிலையில் உணருகிறது. கருவிகள் வேறு உயிர் வேறு என்ற அறிவு கிட்டவேண்டும் இறைவன் அறிவில் கலந்து அறிவிப்பதால் அறிகின்றேன் என்பதை உயிர் உணர்ந்தால் கருவிகளோடு கலந்த சிற்றின்பம் ஒழிந்து, இறைவனோடு கலந்த பரிபூரண இன்பமே தோன்றும்

சகலநிலையில் கருவிகளின் கலப்பும், கேவல நிலையில் கருவிகளற்ற நிலையும் இல்லாமல், தராசு முள் மேல்முள்ளோடு ஒத்து நிற்பதுபோல் அருளோடு கலந்து நின்றால், கருவிகளோடு கலந்துவந்த சிற்றின்பம் ஒழிந்து அறிவுக்கறிவாய் ஆனந்தமயமான இறைவனோடு கலந்த பரிபூரண இன்பமே தோன்றும்.

அறியாமை யறிவகற்றி யறிவினுள்ளே
அறிவுதனை யருளினல் அறியாதே யறிந்து
குறியாதே குறித்ததக் கரணங்களோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பையாகில்
பிறியாத சிவனருளே பிரிந்துதோன்றிப்
பிரபஞ்சபேத மெல்லாம் தானய்த்தோன்றி
நெறியாலே இவையெலா மல்லவாகி
நின்றேன்றும் தோன்றிடுவ னிரர்தாரனுயே.

— சிவஞானசித்தியார் எட்டாஞ்சுத்தி 30,

இந்த நிலையை விட்டு, கருவிகளோடு கலந்தபோதும் இறைவன அறிவிக்க அறிகின்றேன்; என்செயலெல்லாம இறைவன் செயலென்று உணர்ந்தால், மலத்தால் தாக்கப்படாமல் இருக்கலாம் ஆடவனுகிய ஒருவன், பெண்வேடந் தரித்து நாடகம் நடிக்கிறுன். ஆனல் தன்னை ஆண் என்பதை மறக்கமாட்டான்.

கயிற்றைப் பாம்பு என மருண்டவன் விளக்கைக் கொண்டு பார்த்து கயிறெனத் தெளிந்த பின்பும்; வேடிக்கையாக மற்றொருவனுக்கு விளக்கை நீக்கி பயந்தவனைப் போல நடித்து உடலைக்குலுக்குகின்றுன்; நடுங்கிக்காட்டுகிறுன். உடலில் தோற்றம் இப்படியிருப்பினும் உள்ளத்தில் அச்சம் இராதல்லவா? இத்தன்மையாக வாழவேண்டும். கருடன் நிழல் நீரில் பட்டாலும், முள்ளில் பட்டாலும் எவற்றிலும கலக்காதல்லவா? அத்தன்மையாக மாயாகாரியமாகிய உடலும் கலந்து வாழினும், இறைவனை மறவாமல் அறிவினுள்ளே அறிவுதனை அருளினுலறிந்து மலமாயைக் கடந்து சீவன் முத்தராய் வாழலாம்

“ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயுறை எம் ஆதியே”

திருச்சிற்றம்பலம்.

நல்லை.
ஞான சம்பந்தர் ஆதீனத்தில்

நல்லை முருகப்பெருமான் தேர் தீர்த்தத் திருவிழாக்களைமுன்னிட்டு ஆதீனத்தில் அன்னதானம் நிகழவிருக்கிறது

---

## பஜனைப்பாதயாத்திரை

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

வேளி, வேலணை, மண்கும்பான், பண்ணை, வண்ணார்பண்ணை முதலிய இடங்களுக் கூடாக நல்லூர் முருகப் பெருமான் சந்நிதானத்தை வந்து சேரும். இப் பஜனை யாத்திரையில் நாட்டில் பல பாகங்களிலுமுள்ள சைவப்பெரியார்கள் கலந்துகொள்கின்றுர்கள். ந நி.

x x x

நுணுவிற்குளம் கண்ணகை அம்பாள் கூட்டுப் பிரார்த்தனைச் சபையினர் 30-8-70 இல் நல்லூர் தேர்த்திருவிழாவில் கலந்துகொள்ள பஜனைப் பாதயாத்திரை ஒன்றை நடாத்துகின்றனர்.

---

## பண்ணிசைப் புலவர்

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

அத்தகைய சுவப்பணியை மேற்கொண்டிருப்பவரே மெய்கண்டாராதீனப் பண்ணிசைப்புலவர் ஸ்ரீ பி ஏ. எஸ். இராஜசேகரன் அவர்கள்; திரு பி. ஏ எஸ் இராஜசேகரன் அவர்களை இலங்கையில் புனிதத் தன்மை வாய்ந்த ஒரு திருமுறைப் பரம்பரையை உற்பத்திசெய்தற்காக இலங்கை இந்து சமய ஆலோசனைச் சபை மிசவும் கஷ்டப்பட்டு அழைத்தது. திரு பி ஏ. எஸ் இராஜசேகரன் அவர்கள் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்காகவேனும் நமது நாட்டில் தங்கியிருந்து திருமுறை ஓதவல்ல சிறந்த ஒரு பரமபரையை உற்பத்தி செய்ய வசதியளித்ததற்காக வேண்டிய ஒழுங்கைச் செய்யும் வண்ணம் சைவ மக்கள் அரசாங்கததுக்கு விண்ணப்பஞ்செய்தல் கடனுகும்’

உரும்பிராய் ‘தெற்கில் அமைந்துள்ள நல்லூர்க் கந்தன் தண்ணீர்ப் பந்தலில் நடைபெற்ற மெய்கண்டாராதீனப் பண்ணிசைப்புலவர் ஸ்ரீ பி ஏ எஸ் இராஜசேகரனின் பண்ணிசைக் கச்சேரியில் வாழ்த்துரை வழங்கிய பண்டிதமணி நூல்வெளியீட்டுச்சபைக் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஸ்ரீ பி ஏ. எஸ் இராஜசேகரனின் சிஷ்யன் உரும்பிராய், செல்வன் மா. தங்கராசா ஆரம்பத்தில் திருமுறை இசைவிருந்து அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது ——

## சைவசமய நாடக எழுத்துப் போட்டி

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் 1970-இல் நடாத்திய சைவசமய நாடக எழுத்துப் போட்டியில் யாழ். நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரின் “பக்த கௌரி” என்னும் நாடகம் மூன்ரும் இடத்தைப் பெறவுள்ளது. 29-8-70 இல் யாழ். மாநகர சபை மண்டபத்தில் நிகழும் கலைவிழாவில் உடமாநில வித்தியாதிபதியவர்களால் பரிசில் வழங்கப்பெறும். இந் நாடகத்தை கழக உறுப்பினருளொருவராகிய (நாயன்மார்கட்டு) திரு. கு. துரைராசா எழுதி உதவினுர். ——

# நல்லூர் சடையம்மா மட பரிபாலனசபை

இச் சபை நெடுங்காலமாக நல்லூர் தேர் மண்டபத்துக்கு ஈசானத் திக்கிலுள்ள படத்தில் அறுபத்துமூவர் குருபூசைகளையும் மாகேசுரபூசைகளையும் நடத்திவந்தது. இப்பொழுது தொடர்ந்து அத்தொண்டுகளை அங்கு புரிய வசதியில்லாமையினால் மேற்படி தொண்டுகளும், இவ்வருடம் நல்லூர்த் திருவிழாக் காலத்தில் நடைபெறும் மாகேசுர பூசை ஆதியனவும், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மடாலயத்தில் நடாத்தப்பெறும். அடியார்கள் வழமைபோல் இயன்ற ஆக்கமும் ஊக்கமும் நல்கும் வண்ணம் சடையம்மா மட தரும பரிபாலன சபையின் தலைவர் திரு. சி. தர்பிஜயா தெரிவிக்கின்றனர்.

# சைவ சமயக் கலை விழா

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் வழமையாக நடத்துகின்ற சைவசமயக் கலை விழா இவ்வருடம் 29-8-70 சனிக்கிழமை யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். பண்ணிசைப் போட்டி, சைவசமய நடனப் போட்டி, சைவசமய நாடகப் போட்டி முதலியன முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

முற்பகல் நிகழ்ச்சிகளுக்கு சைவப்பெரியார் B. T அரசன் தலைமை வகிப்பார். பிற்பகல் நிகழ்ச்சிகளுக்கு சைவப் புலவர் வித்துவான் வ செல்லையா தலைமை வகிப்பார் வடமாநில வித்தியாதிபதி திரு வி. சங்காலிங்கம் பிரதம விருந்தினராகச் சமுகமளித்துப் பரிசில் வழங்குவார்.

**நாவலர் நல்வாக்கு**

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

### நாரந்தனைத், தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணியம்பாள் கோயில் மகோற்சவம்

ஷெ மகோற்சவம் 6-9-70 ஞாயிற்றுக்கிழமைஆரம்பமாகும் இராககாலத்தில் ஸ்ரீ மகாமேரு சக்கர பூசையும் சைவ சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறும். 15-9-70 செவ்வாய்க்கிழமை பௌர்ணமியன்று நாக சமுத்திர தீர்த்தம் நடைபெறும். 3-9 70 வியாழக்கிழமை புதுத்தேர் வேலையாரம்பிக்கப்பெறும்.

—

## வவனிக்குளம் விநாயகராலயம் கும்பாபிஷேகத்திற்கு விசேஷ பஸ் சேவை இ. போ. சபையிடம் திருப்பணிச்சபை கேட்டுள்ளது

எதிர்வரும் 4-9-70 வெள்ளிக்கிழமை அன்று வவனிக்குளத்தில் சிவபுரம் விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கின்றது அதற்கு அயலூர்களிலும், வெளியூர்களிலும் இருந்து அநேக மக்கள் சமுகமளிக்கவிருக்கின்றனர். அன்றைய தினம் மாங்குளத்திற்கும் துணுக்காய்க்குமிடையில் வவனிக்குளம் நீர்ப்பாசனக் கந்தோர் வரை சென்று திரும்பக் கூடியதாக ஓர் விசேஷ பஸ்சேவை நடாத்துமாறு, இலங்கைப் போக்குவரத்துச் சபையை வவனிக்குளச் சிவாலய திருப்பணிச்சபை கேட்டிருக்கின்றது. ——

### நீர்வேலி, அத்தியார் இந்துக் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கம்

ஷெ சங்கத்தினது வருடாந்தக் 20-8-70 வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கீழ்வரும் தீர்மானம் நிறைவேய்தியது. "பொதுப்பரீட்சைகளில் பிள்ளைகள் அடைந்த பெறுபேறுகள் கல்லூரி வளர்ச்சிக்கு உழைக்கும் அனைவர்க்கும் தென்பூட்டும் நிலையிலிருக்கிறதெனவும் பெற்றோர் காட்டும் சிரத்தையின்மூலமே கல்லூரி வெற்றிப் பாதையில் நடைபெறும் எனவும் கல்லூரி மக்கள் குழு அமைக்க செப்டம்பர் மாதமொரு கூட்டம் நடத்த வேண்டுமெனவும் பெற்றோர்கள் பெருந்தொகையாக அதில்பங்கு பற்றவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பெற்றன" ——

### சேவைநலம் பாராட்டு விழா

அராலி. சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் 33 வருட காலம் தலைமை ஆசிரியராகப் படாடோபமின்றிக் கடமையாற்றிய சைவப்பெரியார் திரு. மு. சதாசிவம் அவர்களுக்கு 30-8-70 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சேவைநலம் பாராட்டு விழா நடைபெறும் பல பெரியார்களும் பாராட்டுரை வழங்குவார்கள். ——

# திருவுந்தியார் நூல் வெளியீடு

மெய்கண்டசாத்திரம் என்னும் சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள்ளும் முதன்மையானதும், காலத்தால் பழைமையானதும் திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனாரால் இயற்றப்பட்டதுமாகிய திருவுந்தியார் என்னும் நூல், திருவாவடுதுறை ஆதீனத்துத் தில்லைச் சிற்றம்பலவர் என்னும் சிவப்பிரகாசர் செய்தருளிய உரையும், வித்துவான் பொன். அ. கனகசபை செய்துதவிய விளக்கவுரை, பொழிப்புரைகளோடு, யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகத்தாரால் வரும் நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாவிலன்று (30-8-70) வெளியிடப்பட இருக்கின்றது அதன் விலை ரு. 1-50. விரும்பியவர்கள் செயலாளர், 411/1. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியிற் பெற்றுக்கொள்க.

# சித்திரம், சங்கீதம், நடன அபிவிருத்திச் சபை

நாட்டில் சித்திரம் சங்கீதம் நடனம் ஆகிய கலைகளின் அபிவிருத்திக்காக வேண்டிய விசாரணைப் புரிய கல்வி மந்திரியவர்கள் பின்வரும் குழுவைக் நியமனம் செய்துள்ளார் பேராசிரியர் ஏ. ஆர். சரத்சந்திரா மற்றைய அங்கத்தவர்கள்: டாக்டர் றஞ்சன் அபயசிங்கா, திரு. சிவ. உ. சோமசேகரம், திரு. ஏச் ஏச் பண்டா,

சங்கீதம், சித்திரம், நடனம், ஆகியவற்றை நல்ல முறையில் கற்பிப்பதைப் பற்றி அரசாங்கத்துக்கு இக்குழு புத்திமதி கூறும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தாமு சிதம்பரப்பிள்ளை கந்தையா நல்லூர் —வழக்காளி

இல. M. B. 10515 எதிராக

செல்லையா நவரத்தினம் நல்லூர் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 10515-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ஆம் ஞூ ஒக்டோபர் மாதம் 1-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை; முதல் வட்டி ரூபாய் 4723/ ம் 3-1-1969 தொடக்கம் 2-3-1970 வரைக்கும் ரூபாய் 3700/- க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு பின் அறவிடப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக்குள் டிவிசனும் நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை 'மன்மதராயன் வளவு' பரப்பு நிலம் ஜூலா. 3ம், குழி 1¼ம் கல்வீடும், கிணறும், பயிர்களும், எல்லை கிழக்கு: முத்துமாரியம்மன் கோவிலின் ஆதனம். வடக்கு தாமு சிதம்பரப்பிள்ளை கந்தையா மேல் குறிக்கப்பட்ட வழக்காளியின் ஆதனம், மேற்கு: ஒழுங்கையும் அருணாசலம் கைம்பெண் தங்கத்துரையடையதும் பங்காளிகளின் உடையதும் தியாகராசா பெண் கமலம் உடையதும் ஆதனம், தெற்கு சண்முகராசா உடையதும் கந்தையா பெண் மங்கையர்க்கரசி உடைய ஆதனங்கள், இதடங்கலும். இக்காணிக்கு மேற்கெல்லை பக்கமாய் கோவில் றோட்டுக்குப் போவதற்கு விடப்பட்ட ஒழுங்கையின் போய்வர பாவிப்புரிமையும். பதிவு இல: யாழ்ப்பாண காணிக் கந்தோர் D. 324 / 43

107, பெரியதெரு, யாழ்ப்பாணம், 15-8-70

எ. பி. பி எதிர்மன்னசிங்கம் வெந்தீஸ் கொமிஷனரும் விலைமதிப்பாளரும் எம். 239 28-8-70

## கதிர்காமம் கந்தசுவாமி கோவிற் கூரை திருத்தப்பெறும்

முருகப்பெருமானுடைய திவ்விய திருத்தலங்களிலொன்றாயுள்ளதும் முருகப்பெருமான் அடியார்களுக்கு அருவமாக அநுக்கிரகம் புரிவதாயும் உள்ள திருக்கோவிலின் கூரை கோவில் நிருவாகிகளால் திருத்தப்பெறுமெனக் நிருவாகிகளுளொருவராகிய திசாவ இரத்துவத்தை தெரிவிக்கின்றனர், ஆதியில் மூலத்தானக்கூரை வேப்ப மரத்தால் அமைந்து வெண்கலத்தகடுகளால் வேயப்பெற்றிருந்ததாம். இப்பொழுது மரங்கள் கெட்டுவிட்டமையினால் கூரைவேலை திருத்தஞ்செய்ய வேண்டிய நிலைமை யேற்பட்டுவிட்டதாக அறிகின்றோம்.

### தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய மகோற்சவம்

மேற்படி கோவில் மகோற்சவம் 1970 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகும் 11-9-70 வெள்ளிக்கிழமை இரதோற்சவமும், 12-9-70 சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும் தினமும் இரவுத் திருவிழா சைவச் சொறபொழிவுகளுடன் ஆரம்பமாகும்.

# திருமண அழைப்பு

வண்ணார்பண்ணை வெலியாத்து உத்தியோகஸ்தர் (பிஸ்கால் உடையார்) வி. செ குட்டிப்பிள்ளை அவர்களின் ஏகபுத்திரி செல்வி: தவமணிதேவிக்கும் உடுப்பிட்டி, செல்வன்: சிவஞானம் மகாதேவன் (எழுதுவினைஞர் M/s Hameed and Ahamed Engineers) அவர்களுக்கும் 1970ம் ஞூ செப்ரெம்பர் (புரட்டாதி) மீ 5-ம் திகதி (5-9-70) சனிக்கிழமை இரவு 11 மணியளவில், யாழ்ப்பாணம் 643, காங்கேசன்துறை வீதி, இலக்க இல்லத்தில் திருமண வைபவம் நடைபெறும்.

( தனி அழைப்பு இல்லை )

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு, காங்கேசன்துறை றோட் இராசைனுர் கைம்பெண் கமலாம்பாள் — வழக்காளி

இல: M B 7741 எதிராக

கைதடி கோயிலாக்கண்டி S. R பொன்னம்பலம் —எதிராளி

M. B. 7741-ம் இலக்க வழக்கில சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம், 1970-ம் ஞூ செப்ரெம்பர் (புரட்டாதி) மீ 25-ம் திகதி (25-9-70) வெள்ளிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 9050 75 சதம், மேலும் 8000/- ரூபாவுக்கு 11-10-65 தொடக்கம் 21-12-66 வரைக்கும் வருடமொன்றுக்கு 8 வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் சட்டப்படியான வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 463-16 சதம் டவுண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும். இதில் 9500/- ரூபா குறைய

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குளி கோவிற்பற்று கோயிலாக்கண்டி இறை 'கொடி நின்ற வயலும் இடல் வளவும்" நிலப்பரப்பும் நெற்பரப்பும் 109¼ ஆனால் 6—8—1936ம் அளவையாளர் திரு P. இராமநாதன் அவர்களால் தயாரிக்கப்பட்ட 149ம் இலக்கப் படத்தின் லொட்டுகள் 1ம், 2ம், எனக் காட்டப்பெற்றதுமான இதே ஆதனம், நெற்பரப்பு நிலப்பரப்பு 96 குளிகள் 9½ என காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போதைய ஆட்சிப்படி 54, 7/12 பரப்பைக் கொண்டதுமான இவ்வாதனத்துக்கு எல்லை கிழக்கு இளையதம்பி கைம்பெண் சிதேவிப்பிள்ளையினுதனமும், கையொழுங்கை முடிப்பும், முத்துவேலு செட்டியார் பகுப்த ஆச்சியினதுமாதனமும் கதிரிப்பிள்ளை செல்லையாவினதும் அப்புக்குட்டி ஐயம்பிள்ளையினதும் ஆதனங்கள், வடக்கு சிதம்பரம் சுப்பிரமணியசுவாமி கோவிலாதனமும் மூவர் மட்சித்திரமடமும், நடசிவாயம் சரவணமுத்துவும், மேற்கு சந்தன் சின்னப்பொடியனுக்கும் அம்பலவாணர் பொன்னையாவுக்கும், வேலன் கைம்பெண் தெய்வியின் உரிமைக்காரர்களுக்குமுரிய ஆதனங்கள், தெற்கு றோட்டும் சபாபதி குமாரயாவுக்கும் சகோதரிகளுக்குமுரிய ஆதனம், சொல்லப்பட்ட பகுப்த ஆச்சிக்குரிய கிழக்கிலுள்ள காணிக்கு இந்தக்காணிக் கூடாக இருக்கும் பாதை உரித்து பிற நீங்கலாக இது முழுவதும். பதிவு இல: F 192/138

வி. செ, குட்டிப்பிள்ளை, ஏலவிற்பனவாளரும் கோட்கொமிஷனரும். Commissioner Sales & Valuer எம் 238 28-8-70

"இராச கிரி" 643, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர், களபூமி, சிதம்பரப்பிள்ளை சண்முகக் கனகரத்தினம்

இல. M. B. 9058 எதிராக —வழக்காளி

யாழ்ப்பாணம், நல்லூர், கோவில் வீதி,

1. சுப்பையா கதிர்காமத்தம்பி
2. பெண் சுந்தரதேவி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9058 இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஞூ புரட்டாதி (செப்டெம்பர் மாதம் 21-ந் திகதி (21-9-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 25,290/-ம், இதில் ரூபா 10,000/-க்கும் ரூபா 7000/-க்கும் 7-5-67 திகதி தொடக்கம் 10-4-69 திகதி வரைக்கும் 100க்கு முறையே 12ம், 15 வீதவட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 100க்கு 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 531-72 சதம்,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று நல்லூரிறை "வருணகுலசூரியர் வளவு" நிலப்பரப்பு நாலு (4 r) குழி 5ம், வீடும், பயிர்களும் வடக்கேயிருக்கும் 2ணற்றில் பங்கும வழிவாய்க்கால் உரித்தும், எல்லை கிழக்கும் வடக்கும் மேற்கும் இரத்தினசபாபதி கைம்பெண் கனகசுந்தரிக்குரிய ஆதனம், தெற்கு பொது ஒழுங்கையும் மூத்ததம்பி சுவாமிநாதனுக்குரிய ஆதனமும், இதடங்கலும் இன்னும் தெற்கொழுங்கையிலிருந்து பிரதான றோட்டுக்குபோக்குவரவு செய்யும் உரித்தும்.

தெல்லிப்பழை, 18-8-70

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை கொமிஷனரும் விலைமதிப்பாளரும் Commissioner & Valuer. எம் 228 (21-8-70)

## வண்ணை, அரசடி விநாயகர் இந்து இளைஞர் மன்றம்

வண்ணை, (கே கே. எஸ். வீதி) அரசடி, விநாயகர் ஆலயத்திலிருந்து, இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாவன்று, பஜனையொன்றை நடாத்தவிருக்கின்றனர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கந்தையா வேலுப்பிள்ளை கைம்பெண் முத்தம்மா
வண்ணார்பண்ணை மேக்கு, யாழ்ப்பாணம் —வழக்காளி.
இல M B 5818 எதிராக
சின்னப்பொடி சுந்தரம், வண்ணார்பண்ணை, வடமேற்கு யாழ்ப்பாணம். அவரின் இறந்த மனைவி இராசத்தின் சொத்துக்களின் சட்டபூர்வமான பிரதிநிதி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 5818 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28-ம் திகதி (28-9-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 2686-00-ம், 12-12-64 தொடக்கம் 2-11-65 வரைக்கும் ரூபா 1500-00க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுதொகைக்கும் இறக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 125-00ம் இதில் ரூபா 2000-00 கழித்து அறவிடப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கொககுவில் மேற்கிறை பிரப்பம்குழி விலப்பரப்பு 2 குளி 2, 1/2யும் வீடும் குசினியும், கடையும் கிணறும், பயிர்களும், இதற்கு எல்லை கிழக்கு சின்னத்தம்பி நடேசு கைம்பெண் முத்துப்பிள்ளைக்குரிய ஆதனம், வடக்கு கையொழுங்கை மேற்கு றோடு, தெற்கு முத்து கந்தையாவிற்கும் மனைவி தெய்வானைக்குமுரிய ஆதனம், இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும். பதிவு இலக்கம் D. 259/150

கா. தர்மலிங்கம்
உரும்பராய், 17-8-70, கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்,
எம். 225 21-8-70

## AUCTION SALE

## கோட்டுக்கொம்மிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோர்ட்டில் இல: 10266
வேலுப்பிள்ளை பெருமையினார், கரணவாய் வடக்கு —வழக்காளி
எதிராக
1. பொன்னையா சின்னத்துரையும்
2. பெண் வள்ளியம்மையும், இமையாணன், உடுப்பிட்டி —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோர்ட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனங்களை 1970ம் ஆண்டு புரட்டாதி மாதம் 28-ம் திகதி (28-9-70) திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

முதலாமாதனம் 9 மணிக்கும், இரண்டாமாதனம் 9-30 மணிக்கும், மூன்றுமாதனம் 10 மணியளவிலும் ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸதிறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று

1. இமையாணன் குறிச்சியிலுள்ள 'இலந்தைப்புலம்' நி. பர. 12, 3/8 எல்லை கிழக்கு சண்முகம் பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு கந்தர் முருகேசுவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு றோட்டு, தெற்கு ராமலிங்கம் கந்தையாவுக்குமுடையவாதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலமும் பனைகள் வடலிகள், கொட்டில், வீடுகளடங்கலில் சொரியலாய் பதினாறிலொரு பங்கும் (1/16)

2. ஷை இறை 'தெற்குப்படசந்தை' வீடு ½ ஷை நி: பர. 16, 5/8 எல்லை கிழக்கு பொன்னர் சின்னையாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம், வடக்கு பொன்னையா கைம்பெண் முத்தாச்சிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம், மேற்கு றோட்டு, தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகளடங்கலிற் சொரியலாய் முப்பத்திரண்டிலொரு பங்கும். (1/32)

3. இறை 'தெவ்வெலலை' நி. பர. 25½ல் தெற்குப் புறமாக நி. பர 15 குளி 6ம் வடக்கரைவாசிக்கு நி. பர. 7 குளி 12 எல்லை கிழக்கு சீனியர் ஆறுமுகத்தினுரிமைக்காருக்குமுடைய ஆதனம். வடக்கு சதாசிவம்பிள்ளை பெண் சின்னப்பிள்ளைக்குமுடையவாதனம், மேற்கு வேலுப்பிள்ளை பெண் மரகதப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு வல்லையப்பர் நாகமுத்துவுக்குமுடைய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் (½)

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை:— | ரூபா | 889 33 |
| 14-11-1968 தொடக்கம் 29-6-70 வரை 5% வட்டிக்கு | | 72 25 |
| முழுத்தொகை | ரூபா | 961 58 |

க. நா. சுப்பிரமணியம்
புலோலி மேற்கு, கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
பருத்தித்துறை. 19-8-70 எம். 227 21-8-70

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நானமறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 28—8—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

## திருவீதி எங்கும் திருவருள் மயம்!



பக்தர்: "...நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான்முகனே" என்று அருணகிரிநாதசுவாமிகள் விரும்பியது கியாயமே! நல்லூர் முருகப்பெருமான் திருவிழாவைப் பார்க்கும் மெய்யடியார்களுக்கு அருணகிரியார்போன்று ஆசை எழுவது வியப்பாகுமா? வீதி எங்கும் திருவருள் மயம்; அதை எப்படிச் சொல்லுவது?

சித்தர்: 'நல்லூர் திருவருள் மயமாயிருப்பது உண்மைதான்; திருக்கோயில்கள் எங்கும் இந்த புனித ஒழுங்குகள் நடைமுறைக்கு வருமாயின் எவ்வளவு தவம் பெருகும் தவத்துக்குரிய பொழுதை அவப் பொழுதாககும் விழாககளாகஇனால் 'நாலாயிரங்கண் வேண்டும்' என எவர் தான் விரும்புவார்பாருங்கோ?

—"நாயன்மார் நாதன்"

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M B 10703
குணரத்தினம் சுப்பிரமணியம் கைம்பெண் பாறுவதிப்பிள்ளை மூளாய் —வழக்காளி
எதிராக
நாகர் சின்னத்தம்பி, தொல்புரம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10703-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் துண்டுக் காணி 1970-ம் ஞூ புரட்டாதி மாதம் 5-ம் திகதி (5-9-70) சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 3153-42ம், 22-3-69 தொடக்கம் 19-1-70 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 10%வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 418-01

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று தொல்புரத்தில் உள்ள (பொன்னாலை) சிறுத்தூரவை அல்லது உப்பு வயல் எனனும் 38 நிலப் பரப்பில் விளைப்பட்ட 12 பரப்பு பிற நீங்கலாக மிகுதி 26 பரப்பு இதற்கு எல்லை கிழக்கு – வைத்திலிங்கம் பூபாலபிள்ளையின் ஆதனம், வடக்கு – அம்பலவாணர் சுவாமிநாதனதனம், தர்சமயம் றோட்டு, மேற்கு – நாகர். பொன்னரின் ஆதனம், தெற்கு தம்பிப்பிள்ளை வைத்தியின் ஆதனம், இது அடங்கலிலும்.

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
தொல்புரம், மதிப்பாளரும்
3-7-70 எம் 229 21-8-70

## COMMISSION SALE

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இலக்கம்: 10736

புலோலி கிழக்கு சந்தியாப்பிள்ளை வஸ்தியாப்பிள்ளை தன் வகைக்காகவும் புலோலி கிழக்கு வஸ்கியாம்பிள்ளை பெண் ஞானப்புவின் ஆதனத்துக்குப் பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டின் 932-ம் இலக்க உரிமைத் தத்துவ வழக்கில் உரிமைத் தத்துவகாரன் என்ற வகையிலும் —வழக்காளி

எதிராக

துன்னாலை வடக்கு கார்த்திகேசு இளையதம்பி தன் வகைக்காகவும் துன்னாலை வடக்கு இளையதம்பி பெண் இரத்தினத்தின் ஆதனத்துக்குப் பிரதிக ரியஸ்தர் என்ற வகையிலும் — எதிரி,

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1970-ஆம் ஞூ புரட்டாதி மீ 28-ஆம் உ (28-9-70) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று துன்னாலை வீரசுந்தரமுதலி குறிச்சியிறை அரிய வேளாளன் செம்பாடு விலப்பரப்பு 41, 1/2 கொயஞ்ஞேவிற் கொள்விலை அரிய வேளாளன் செம்பாடு விலப்பரப்பு 24 கூடியவிலப்பரப்பு 65, 1/2 இதில் ஆடசிப்படி விலப்பரப்பு 12. பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு ஆறுமுகம் வசுவசோதிக்கும் மறு பேருக்குமுடைய வாதனம், வடக்கு வல்லியப்பர் ஆறுமுகத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம், மேற்கு மூத்தபிள்ளை சிதம்பரப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு வாரியார் வல்லிபுரம் சூரிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம் இதில் 5/24 பங்கும் இந்தக காணியின் பெயருடைய காணியின் மேற்குப் பாகத்திலிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழி வாய்க்காலுரித்தும்.

தீரட்சிததொகை ரூபா 4515-00
ரூ. 3500 க்கு 18-12-69 தொடக்கம் 17 4 1970 வரை 6 வீத வட்டி ரூ. 90-00
ரூபா 4605 க்கு 17-4 70 தொடக்கம் 17-8-70 வரை 5 வீத வட்டி ரூபா. 76-00

மொத்தம் ரூபா 4681-00

செலவு கணக்குப் பார்க்கவில்லை,

V. M கந்தசாமி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
வல்வெட்டித்துறை
10-8-70 எம். 230 28-8-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. கொன்வென்ற் தெற்கு யாழ்ப்பாணம் வஸ்தியாம்பிள்ளை பீற்றர் டேவிட்
2. ஷை யூர் பெண் சிசிலியா —வழக்காளிகள்

வழ: இல. M. B. 8838 எதிராக
இல: 136, வாங்க்சால் வீதி, யாழ்ப்பாணம்
மிக்கேல் யோன் யோசேப் கைம்பெண் அருளம்மா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 8838-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஞூ புரட்டாதி மீ 30-ஆம் திகதி (30-9-70) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 7840-00ம், 14-12-67 தொடக்கம் 6-12-67 வரைக்கும் ரூபாய் 7000-00க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் மிகுதிக் கோட்டுச்செலவு ரூபாய் 314-34 சதம் இதில் ரூபாய் 2000-00 5-12-68 லும் ரூபாய் 1000-00 23-8-69லும் கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளிக் கோவிற்பற்று சுண்டிக்குளி இறை 'துக்காடு' பத்துடன் எட்டில் மூன்று குழி (10, 3/8 குழி) வடக்கெல்லையருகில் கல்வீடும் மேல் மாடிக் கட்டிடமும் இது தற்பொழுது கடையாய்ப் பாவிக்கப்படுகிறது குசினியும், கிணறும் மற்றும் அதற்குரியவைகளும் எல்லை கிழக்கும் வடக்கும் றோட்டு மேற்கு றெயில் பாதை தெற்கு அந்தோனிப்பிள்ளை மதலேசுவிற்குரியவாதனம் இதிற் சொரியலாய் அரைவாசி.

வை. ஏரம்பமூர்த்தி
காரைநகர், 1970-ம் ஞூ ஆடி மீ 23-ம் திகதி கொமிஷனரும்
எம். 231 28 8-70, விலைமதிப்பாளரும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊர்காவற்துறை றிக்குவெஸ்ற கோட்டில்
மண்குமபான் மூத்ததம்பி கணபதிப்பிள்ளை — வழக்காளி
இல. 9159 எதிராக
1 மண்கும்பான் குழந்தைவேலு கந்தையா
2 ஷை யூ பெண் நாகபூரணம் எதிராளிகள்

ஊர்காவற்துறை றிக்குவெஸ்ற கோட்டின் 9159-ம இலக்க வழக்கில எனக்குக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும ஒரு துண்டுக்காணி 1970-ம ஞூ புரட்டாதி மீ 24-ஆம் திகதி (24-9-1970) வியாழக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 375-00ம, 29-7-68 தொடக்கம 10-8-69 வரை ரூபாய் 250-00க்கு 12 வீதமான வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 60-25 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டிக் கோவிற்பற்று மண்கும்பானிறை "பிள்ளைதோட்டதுக்கு தெற்குப்பிள்ளை தோட்டம்" பர. நி. இலா. இருபது (பர. நி. இலா. 20) பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு கனகர் மகன் கறபகத்திற்கும் மறுபேர்கட்குமுரியவாதனம், வடக்கு கார்த்திகேசு முத்தையாவிற்கும் மறுபேர்கட்குமுரியவாதனங்கள், மேற்கு சின்னத்தம்பி சதாசிவத்திற்கும் மறுபேர்கட்குமுரியவாதனங்கள் தெற்கு வயிரவசுவாமி கோவிலாதனம், இதடங்கலிற் சொரியலாயரைவாசியும் அதற்குரியவைகளும.

சாரைநகர் வை. ஏரம்பமூர்த்தி
1970-ப் ஞூ ஆவணி மீ 20-ம் திகதி. ஏல விற்பனையாளரும்.
எம். 232 28-8-70 கொமிசனரும், விலைமதிப்பாளரும்.

## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| | |
|---|---|
| உள்நாடு | |
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |